Scale A Tempo 110 Style Latin> Rumba Island

09. சிலுவையின் வார்த்தைகள்

இயேசுவே உம் சிலுவையின் வார்த்தைகள்
இதயம் உருக்குதைய்யா
துக்கம் நிந்தனை வேதனைகளை
ஏற்றீர் நீசனுக்காகவே

1

உம்மை சிலுவையில் அறைந்தோருக்காக (மாற் 15:24)
பிதாவே இவர்களை மன்னியும் என்றீர் (லூக் 23:34)
உந்தன் அன்பினை எண்ணி நாளும்
போற்றி புகழ்ந்திடுவேன் – இயேசுவே

2

வலப்பக்கம் தொங்கும் கள்ளனிடமோ
இன்று பரதீசிலிருப்பாய் என்றீர் (லூக் 23:43)
பாவம் போக்கி சிலுவையில் கள்ளனை
இரட்சித்தீர் பரம் சேர்த்திட்டீர் – இயேசுவே

3

ஜீவ தண்ணீர் தருவேன் என்றவர் (யோவான் 4:11)
தாகமாயிருக்கிறேன் என்றீரே (யோவான் 19:28)
முடிந்தது என்று உந்தன் ஆவியை (யோவான் 19:30)
பிதாவின் கரத்தில் ஒப்படைத்தீர் – இயேசுவே